பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை (20 - 08 - 2000) VALAMPURI ஒலி: 244

பதினோராவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் களம்

# தேர்தல் களத்தில் குதிப்பதற்கு அரசியல் கட்சிகள் தயார்நிலையில்!

## வேட்பாளர் தெரிவில் கட்சிகள் மும்முரம்

(கொழும்பு அலுவலக நிருபர்)

**பத்தாவது பாராளுமன்றம்நேற்று நள்ளிரவு கலைக்கப்பட்டதை அடுத்து பதினோராவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் களத்தில் தேர்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 41 அரசியல் கட்சிகள் குதிக்கவுள்ளன.**

**குறுகியகால இடைவெளிக்குள் தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவிருப்பதால் வேட்பாளர்கள்தெரிவில் கட்சிகள்யாவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருகின்றன.**

பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன ஐக்கிய முன்னணி, மற்றும் தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம்கட்சிகளும் வேட்பாளர்கள்தெரிவில் ஆர்வம்காட்டி வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளில்இறங்கியதுடன் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் படலமும் ஆரம்பிக்

(8 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் களத்தில் குதிக்கத் தயாராகும் தமிழ்க் கட்சிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ பி டி.பி, புளொட், ரெலோ, ஆகியன தனித்தனியாக போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்டத்தில் கூட்டணியின் உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையிலும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை தமிழ் காங்கிரசும் தேர்தல் களம் புகுந்திடத் தயார்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்... வுள்ளதாக கட்சியின் செய... தரணி செல்வி சுபா சி வி...

## யாழில் எயிட்சைக் கட்டுப்படுத்த கர்ப்பிணித் தாய்மாரின் இரத்தம் பரிசோதனைக்கு?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ''எயிட்ஸ்'' தொடர்பாக வெளியான தகவல்களை அடுத்து கர்ப்பிணித்தாய்மார்களிடம் எயிட்ஸ் நோய்த்தொற்று இருக்கிறதா என்பதை அறிவதற்கு அவர்களிடம் இருந்து இரத்தம் பெறப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சுகாதாரப் பிரிவினர் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரதராஜப்பெருமாள் யாழ்ப்பாணத்தில் போட்டி

[வவுனியா]

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக் குழு சார்பில் போட்டியிடவுள்ளதாக வன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜமனோகரி தலைமையில் வன்னியில் ஐ. தே. கட்சி போட்டி

(வவுனியா)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தெரிவு இன்று நடைபெறவுள்ளதாக கட்சியின் அமைப்பாளரும், முன்னாள் எ.பியுமான இராஜமனோகரி புலேந்திரன்நேற்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'ரெலோ' வன்னியில் தனித்து போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை தவிர்ந்த ஏனைய அனைத்து இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக கட்சியின் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்திலும், சட்டத்தரணி செல்வி சுபாசினி தலைமையில் திருமலையிலும், சட்டத்தரணி சச்சிதானந்தன் தலைமையில் மட்டக்களப்பிலும், பெரியசாமி தலைமையில் வவுனியாவிலும் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ★ வன்னிமாவட்ட கூட்டணி வேட்பாளர்களைச் சந்திக்க கூட்டணி தலைவர்கள் வவுனியா வருவார்?

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வன்னிமாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் தெரிவுக் கூட்டம் இன்று பிற்பகல் வவுனியா தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரியலயத்தில் நடை— பெறவுள்ளதாக செயலாளர் புனிதசிங்கம் மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதே வேளை வன்னி மாவட்டத்தில் தமிழர் விடு

(8ம் பக்கம் பார்க்க)

## பயணிகளுக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையே இன்று இடம் பெறவிருந்த விசேட கப்பல் சேவை திட்டமிட்டபடி இன்று நடைபெறுமா என்பது பற்றிய தகவல்கள் இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லையென யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறி

(8ஆம் பக்கம் பார்க்க)

## 'ரெலோ' வன்னியில் தனித்து போட்டி முன்னாள் உறுப்பினர் களத்தில்!

[வவுனியா]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் ரெலோ அமைப்பின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செல்வம் அடைக்கலநாதன் ராஜாகுகனேஸ்வரன் ஆகிய இருவரின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

வன்னி மாவட்டத்தில் ரெலோ அமைப்பு தனித்துப் போட்டியிடுவதென ஏற்கனவே எடுத்த முடிவில் எதுவித மாற்றமும் இல்லை என ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [வ]

## தபால் மூலம் வாக்களிப்பு 26ஆம் திகதி முதல் ஆரம்பம்

(கொழும்பு)

நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலுக்கு தபால்மூலம் வாக்களிக்க விரும்புவோர் எதிர் வரும் 26ஆம் திகதி முதல் அடுத்த மாதம் முதலாம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க அறிவித்துள்ளார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## 18தினங்களில் 51பேர்கைது ஆறுபேரைக் காணவில்லை

இம்மாதம் 18 தினங்களில் கைதான 51பேர்களில் 6 பேரைக் காணவில்லை என மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

காணாமல் போனவர்களின் உறவினர்களால் வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் 51பேரைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாள் குறைகேள் செயலமர்வில் நாலாயிரம் மக்கள் பங்குபற்றினர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்றும் முன்தினமும் வடக்குக் கிழக்கு மாகாண சபையும் யாழ். அரச செயலகமும் இணைந்து நடத்திய மக்கள் குறைகேள் செயலமர்வின் போது மொத்தமாக 4 ஆயிரம் பேர் பங்குபற்றியிருந்தனர் எனவும் இவ்விரு தினங்களிலும் மொத்தமாக 834 பிரச்சினைகள் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவற்றுள் 254 பிரச்சினைகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமெரிக்க பிரதிநிதிகள் நால்வர் விரைவில் இலங்கை வருவர்

## இனப்பிரச்சினை குறித்து ஆராய்வர்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கென அமெரிக்காவின் 4 பேர் கொண்ட பிரதிநிதிகள் சபை உறுப்பினர் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

இத்தகவலை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களின் வருகை பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பிரதிநிதிகள் குழு, அரச அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனப் பணிப்பாளர் ஆகியோருடன் தமது சந்திப்புக்களை நடாத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்புக்களின் போது, இலங்கை இனப்பிரச்சினை மற்றும் பொருளாதார முதலீடுகள் சம்பந்தமான விடயங்களே முக்கிய பேச்சுவார்த்தை அம்சங்களாக அமையும் என அமெரிக்க தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேசமயம் அண்மையில் இலங்கை வந்த நோர்வேயின் முன்னாள் பிரதமர் கேஜில் மட்னிபுடினிக், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமரசப் பேச்சுவார்த்தையை அரச புலிகள் தரப்பு முன்னெடுக்க வேண்டும் எனவும், அதற்கு தமது ஒத்துழைப்பு என்றும் உண்டெனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

வலி.கிழக்கு பிரதேச சபை

# தற்காலிக ஊழியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## பொறுப்பாளர் ரவி முயற்சி

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப்பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரமுகர் ரவி தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்டோரின் பெயர் மற்றும் விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச சபையில் பலர் நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில்சேவையாற்றி வருவதையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மேலும் அறியப்படுகிறது. (க-79)

# உள்ளூர் சீனியின் விலை ஒக்ரோபர் முதல் குறைவடையும்

## உயர் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் சீனியின் விலை ஒக்ரோபர் மாதம் முதல் குறைக்கப்பட இருப்பதாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் சீனியின் நிரம்பல் அதிகரித்தமையும், சீனியின் தாராள இறக்குமதியும் இவ் விலைக் குறைப்பிற்கு காரணமாக இருக்கலாமென வர்த்தக துறைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் சம்பந்தப்பட்ட அதிகாரி இது தொடர்பாக எவ்வித கருத்தையும் தெரிவிக்க மறுத்து விட்டார். (உ)


**St. John's College, Jaffna.**

**Chundikuli Girls' College, Jaffna.**

**ADMISSION-2001**

1. பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள. தரம் 1, தரம் 6.
2. (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-2000 முதல் 15-09-2000 வரை பெற்றுக் கொள்ளலாம்.


# தோத்திர பஞ்சகம் சிறந்தநூல்

(புலோலி)

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இந்து சமயத் துறை சிறந்த நூல்கள் தெரிவுப் போட்டியின் சமஸ்கிருதத்துறைப் போட்டியில் சாவகச்சேரி மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கு. சதாசிவசர்மாவின் "தோத்திர பஞ்சகம்" நூல் பரிசிலையும் சான்றிதழையும் பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர் ஸருபன மஞ்சரி கணபதிஹோமம், சோதிட நாமமஞ்சரி சந்தியாவந்தனம் யாக மண்டபபூசை ஆகிய நூல்களை எழுதியுள்ளதும் குறிப்பிடத்தக்கது [க52

## வருடாந்த உற்சவம்

வல்வெட்டித்துறை அருள்மிகு வன்னிச்சி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (உ-16)

## புதன் சூரியனுடன்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட யோகத்தை ஏற்படுத்தும்.

கலைத்துறை

சூரியனும் சந்திரனும் கூடியுள்ள ஜாதகர்களுக்கு கலைத் துறையுடன் கூடிய கல்வியில் அணியணியாக முன்னேற்ற

# பருத்தித்துறை வைத்தியசாலை சத்திர சிகிச்சை விடுதி 2இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைசத்திர சிகிச்சை வாட்டை எம்.எஸ். எவ். வைத்திய சேவைக்குழுவினர் சுமார் 2 இலட்ச ரூபா செலவில் திருத்தி புனரமைத்துள்ளனர்.

மேலும் எம். எஸ். எவ். வைத்திய சேவைக் குழுவினர் இவ்வைத்தியசாலையின் மகப்பேறு பிரிவு வாட்டையும் சுமார் 2 இலட்ச ரூபா செலவில் திருத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். [க-52]

# விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான விசேட கலந்துரையாடல் அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர்கள் மற்றும் கலாசார உத்தியோகஸ்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் செயலகக்கேட்போர் கூட்டத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபொறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் க. பரமேஸ்வரனும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவேசகல விளையாட்டு, கலாச்சார உத்தியோகஸ்தர்களையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-3]

# மலசலகூடங்கள் திருத்தி அமைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் மலசலகூடங்களை நவீன முறையில் மீள் அமைப்பு செய்வதற்கான அனுமதியினை வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு வழங்கியுள்ளது.

15 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட இருக்கும் மேற்படி வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-23)

# நேற்றைய குறைகேள் சேவையில் ஆசிரியர் பிரச்சினையும் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் குறைகேள் சேவை நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆசிரியர் சங்கக்குழு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடியது.

மாகாணக் கல்விப்பணிப்பாளரும் உடன் இருந்தார். வடமாகாண ஆசிரியர் சங்கக் குழுவில் அதன் தலைவர் சா. தியாகலிங்கம், செயலாளர் மு. இராசநாயகம், செயற்குழு உறுப்பினர்களான ந. புகன் சிறிந்திரன், இ. ரவிச்சந்திரன் ஆகியோர் இடம்பெற்றனர்.

கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள்

...யும், ஆசிரியர் பதவியுயர்வுகளையும் வழங்கல்.

ஆசிரியர்களது சம்பளமாற்றங்கள், சம்பள உயர்வுகள் உரிய காலத்தில் இடைக்க வழிசெய்வதுடன், ஆசிரியர்களது முறைப்பாடுகள எதிர்காலத்தில் உரியமுறையில் அணுகப்படல்.

ஆசிரியர் வளப்பங்கீடு தொடர்பாக ஆசிரியர் வருடாந்த இடமாற்றங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய மேற்கொள்ளல்.

யாழ். மாவட்டத்துக்குரிய இலவசப்பாட நூல்கள் உரிய காலத்தில் கிடைக்கவழி செய்தல்.

ஆசிரியர்களது சம்பளம் மாதாந்தம் 20ஆம் திகதி கிடைப்பதை உறுதி செய்தல்.

அதிபர், சேவைக்கால ஆலோசகர் பதவி நியமனங்

யின் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அப்பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரமுகர் ரவி தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணை ரங்கள் அறுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச சபையில் பலர் நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில்சேவையாற்றி வருவதையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மேலும் அறியப்படுகிறது. (க-79)

# உள்ளூர் சீனியின் விலை ஒக்ரோபர் முதல் குறைவடையும்

## உயர் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் சீனியின் விலை ஒக்ரோபர் மாதம் முதல் குறைக்கப்பட இருப்பதாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் சீனியின் நிரம்பல் அதிகரித்தமையும், சீனியின் தாராள இறக்குமதியும் இவ் விலைக் குறைப்பிற்கு காரணமாக இருக்கலாமென வர்த்தக துறைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் சம்பந்தப்பட்ட அதிகாரி இது தொடர்பாக எவ்வித கருத்தையும் தெரிவிக்க மறுத்து விட்டார். (உ)


St. John's College, Jaffna.

Chundikuli Girls' College, Jaffna.

ADMISSION-2001

1. பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள. தரம் 1, தரம் 6.
2. (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-2000 முதல் 15-09-2000 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2000 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படா.
   (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   (ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-2000 அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250/-
7. வயதெல்லைகள்:
   (அ) தரம் ஒன்று: விண்ணப்பதாரி 1-2-1995க்கும் 31-1-1996க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (ஆ) தரம் ஆறு: விண்ணப்பதாரி 1-2-1990இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை: தரம் ஆறு வகுப்புக்கு 30-9-2000 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடாத்தப்படும். விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

[கி/726]

அதிபர்கள்


# தோத்திர பஞ்சகம் சிறந்தநூல்

(புலோலி)

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இந்து சமயத் துறை சிறந்த நூல்கள் தெரிவுப் போட்டியின் சமஸ்கிருதத்துறைப் போட்டியில் சாவகச்சேரி மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கு. சதாசிவசர்மாவின் "தோத்திர பஞ்சகம்" நூல் பரிசிலையும் சான்றிதழையும் பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர் ஸருபன மஞ்சரி கணபதிஹோமம், சோதிட நாமமஞ்சரி சந்தியாவந்தனம் யாக மண்டபபூசை ஆகிய நூல்களை எழுதியுள்ளதும் குறிப்பிடத்தக்கது [க52

## வருடாந்த உற்சவம்

வல்வெட்டித்துறை அருள் மிகு வன்னிச்சி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறு தினம்செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (உ-16)

## புதன் சூரியனுடன்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட யோகத்தை ஏற்படுத்தும்.

### கலைத்துறை

சூரியனும் சந்திரனும் கூடியுள்ள ஜாதகர்களுக்குகலைத் துறையுடன் கூடிய கல்வியில் அணியணியாக முன்னேற்றமடையக் கூடிய பாக்ய முண்டாகும். ஓவியத்திலும்- கவி காவியம் புனைவதிலும், திரைப்படக் கதைவசனம்எழுவதிலும் பிரபலமடைவார்கள்.

ஒருவர் திரைப்படத் துறையில் முழுமையாக ஈடுபட வேண்டுமானால், அந்த ஜாதகருடைய ராசி சக்கரத்தில், அங்காரகனும்நிழல்கிரகமான ராகுவும் கூடி இருக்க வேண்டும். அல்லது ஒருவருக்கொருவர் கேந்திர அமைப்புபெற்று இருக்கவேண்டும். இதுஇல்லை என்றால், புதன்-சுக்கிரன்-சந்திரன்-சனி ஆகிய கிரகங்கள் நட்புடன் கூடி இருக்க வேண்டும்.

ஜென்மலக்கினத்திற்கு 5ம் இல்லத்தில் குரு- சுக்கிரன் -புதன் ஆகிய மூவரும் கூடி இருந்து, அதில் சுக்கிரன் ஆட்சி பெற்று இருந்தால், கவிபாடும் ஆற்றல் மிக்கவராக இருப்பார். பேச்சில் வல்லமை- தமிழில் பாண்டித்தியம், மந்திராலோசனை, தெய்வ வழிபாடு, ஆன்மீகம் போன்றவற்றில் அதிக அளவு ஈடுபாடு இருக்கும். அரசியல் வட்டாரத்திலும், பெரும்புள்ளிகளின் ஆதரவு உடன் இருக்கும். நீதித் துறையில் செல்வாக்கு அமையும். ஆனால் நிதி நிலையில் தான் பற்றாக்குறை இருந்து வரும். (சு)

...மனசலகூடங்களை நவீன முறையில் மீள் அமைப்பு செய்வதற்கான அனுமதியினை வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு வழங்கியுள்ளது.

15 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட இருக்கும் மேற்படி வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-23)

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் க. பரமேஸ்வரனும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவேசகல விளையாட்டு, கலாச்சார உத்தியோகஸ்தர்களையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-3]

# நேற்றைய குறைகேள் சேவையில் ஆசிரியர் பிரச்சினையும் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் குறைகேள் சேவை நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்றபோது யாழ். மாவட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆசிரியர் சங்கக்குழு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடியது.

மாகாணக் கல்விப்பணிப்பாளரும் உடன் இருந்தார். வடமாகாண ஆசிரியர் சங்கக் குழுவில் அதன் தலைவர் சா. தியாகலிங்கம், செயலாளர் மு. இராசநாயகம், செயற்குழு உறுப்பினர்களான ந. புகன் சிறீந்திரன், இ. ரவிச்சந்திரன் ஆகியோர் இடம்பெற்றனர்.

கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.

இராணுவ நடவடிக்கையின் காரணமாக தென்மராட்சிவலயத்தில் மீட்கமுடியாதிருக்கின்ற ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளுக்காக மாற்று ஏற்பாடுகளைச் செய்து சம்பள நிலுவைகளையும், ஆசிரியர் பதவியுயர்வுகளையும் வழங்கல்.

ஆசிரியர்களது சம்பளமாற்றங்கள், சம்பள உயர்வுகள் உரிய காலத்தில் கிடைக்க வழிசெய்வதுடன், ஆசிரியர்களது முறைப்பாடுகள எதிர்காலத்தில் உரியமுறையில் அணுகப்படல்.

ஆசிரியர் வளப்பங்கீடு தொடர்பாக ஆசிரியர் வருடாந்த இடமாற்றங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய மேற்கொள்ளல்.

யாழ். மாவட்டத்துக்குரிய இலவசப்பாட நூல்கள் உரிய காலத்தில் கிடைக்கவழி செய்தல்.

ஆசிரியர்களது சம்பளம் மாதாந்தம் 20ஆம் திகதி கிடைப்பதை உறுதிசெய்தல்.

அதிபர், சேவைக்கால ஆலோசகர் பதவி நியமனங்களின் போது வலயங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் நீக்கப்பட்டு மாவட்டம் முழுமைக்கும் பொதுவான நடைமுறையினைப் பின்பற்றல்.

எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள ஆசிரிய நியமனங்களுக்கு பாடத்துறைகள் ஒதுக்கப்படும்போது க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்ற பாடங்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். (க)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்குப் பிரிவின் செயலாளரும், சமூக சேவையாளரும் பத்திரிகையாளருமான ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாயன்மார்கட்டு பாரதி வீதியில் வசிப்பவருமான

## திரு. இ. மயில்வாகனம் J. P

(பிரதம தபாலகம் யாழ்ப்பாணம்)

நீதி அரசியல் விவகார அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு பதவியேற்றுள்ளதையிட்டு பாராட்டுகின்றோம். அவரது பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சு. தி. சிவலோகநாதன்
உதவி பாதுகாப்பு உத்தியோகத்தரும்,
நண்பர்களும் வ.பி.போ. சபை
கோண்டாவில்.

# செய்தித் துளிகள்

## இன்று

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சன சமூக நிலைய தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வு, இன்று பிற்பகல் 2.30 மணியளவில் நிலையத் தலைவர் எம். முரளிதரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில்வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, ஈழ மக்கள ஜனநாயகக்கட்சி வலிகிழக்கு அமைப்பாளர் தோழர் ரவி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

[உ-79]

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் திலலைச்சிவன் எழுதிய ''இருகாவியங்கள்'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 30 மணிக்கு இராமகிஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது, (செ

## செப்டம்பரில் அதிகரித்த ஒய்வூதியம்

(கல்வியங்காடு)

ஓய்வூதியப்பணம் பெறுவோருக்கான இம் மாதக் கொடுப்பனவில் 300 ரூபா அதிகரிக்கப்படவில்லை.

இம் மாத வவுச்சர்கள் குறித்த திகதிக்கு முன்பு தயாரிக்கப்பட்ட காரணத்தால் இக் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடியவில்லை.

அதனால் அடுத்த செப்டம்பர் மாதப்பணத்துடன் நிலுவையாகச் சேர்த்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-54)

## சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

இலங்கை அமெச்சூர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களிற்கான சான்றிதழ்கள் இதுவரை இடைக்கப்பெறவில்லையென பரீட்சார்த்திகள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

இப் பரீட்சை முடிவுகள் வெளியாகி நான்குமாதங்கள் கடந்த நிலையில், இந்நிறுவனத்தால் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் உரியவர்கள் கையில் அது இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்பதால் பெரும் குழப்ப நிலைகாணப்படுகிறது. (த-22)

## பிரதம செயலாளர் நெடுந்தீவு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கிழக்கு மாகாண அமைச்சின் பிரதம செயலர் ஜி. கிருஷ்ணமூர்த்தி நேற்று நெடுந்தீவு கிழக்குக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது அடிப்படை வசதிகளான குடிநீர்விநியோகம், போக்குவரத்து, மின்விநியோகம் போன்ற விடயங்களை நேரடியாககண்டறிவதுடன்நினைவுச் சின்னங்களை பாதுகாத்தல் சம்பந்தமாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

[ந-3-18]

## அன்னதானம்

(அரியாலை)

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வழமை போன்று இம் முறையும் அன்னதானநிகழ்வு நல்லூர் ஸ்ரீ துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறுகிறது. (த-106)

## அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச சபைக்கு உட்பட வர்த்தக நிலையங்களின் அளவை நிறுவை உபகரணங்களுக்கு, வரும் 22,24,25 ஆம் திகதிகளில் முத்திரையிடப்படவுள்ளது.

வலிமேற்கு பிரதேசசபை உப அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல்பிற்பகல் 2 00 மணிவரை இப்பணி இடம்பெறும் (உ-3)

## கணனி மயப்படுத்தப்படும்

(கல்வயல்)

பருத்தித்துறை நகரசபைக்குரிய வேலைகள் பலவும் அண்மையில் அரசினால் கணனி மாயமாக்கப்படவுள்ளது.

இதன் முதல் திட்டமாக ஆவணி மாதச் சம்பளப் பட்டியல் பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்படவுள்ளது.

கணனித்துறையில் புலமை வாய்ந்த பலர் இச்சபையில் கடமையாற்றுவதனால் விரைவில் அனைத்து வேலைகளும் கணனி மாயமாக்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (த-111)

## நிர்வாகிகள் தெரிவு

[யாழ்ப்பாணம்]

திவ்ய ஜீவன சங்க ஆதரவில் சிவானந்தர் சிறுவர் சமய பாடசாலையின் நலன் புரிச் சங்க அங்குரார்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் போஷகராக இ. கனகரெத்தினம், தலைவராக திருமதி க. சூரசங்காரன். செயலாளராக ஆ, கனகசபை, பொருளாளராக, அ. பரமேஸ்வரன் என்பவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். (த)

## முதலுதவி பெட்டிகள்

(மட்டக்களப்பு)

முதல் தடவையாக கடற்றொழில் நீரியியல் துறைஅமைச்சர்மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி துறையில் ஈடுபட்டுள்ள 100மீனவர்களுக்கு 100பெறுமதி வாய்ந்த முதலுதவிப் பெட்டிகளை வழங்க உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நீரகவள அபிவிருத்தி அதிகாரி எஸ். தவபாலரத்தினம் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில்உள்ள 10பிரதேச செயலர் பிரிவில்இருந்து தலா10மீனவர்கள் பதிவு செய்யப்பட்ட மீனவ கூட்டுறவுசங்கங்கள் ஊடாகதெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட நீரகவள அபிவிருத்தி ஊடாக அடுத்தவாரம் வைபவ ரீதியாக இவ் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளதாக அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் சகல விதமான மருந்துப்பொருட்களும் அடங்கிய முதலுதவிப்பெட்டியே வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (க-60)

# மட்டக்களப்பில் பெண்களுக்கு எதிராக தொடரும் தாக்குதல்

## 17 வயதுச் சிறுமி வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களிற்கு எதிராக நடக்கும் வன்முறைகளிற்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் உள்ள 15 அரச சார்பற்ற அமைப்புக்கள் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

அண்மையில் தாமரைக்கேணி வீதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் 17 வயது மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தும், வாழைச்சேனையைச் சேர்ந்த மாணவி இளைஞன் ஒருவரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதை அடுத்தும் மட்டக்களப்பில் பெண்களிற்கு எதிராக நடக்கும் வன்முறைகளிற்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய பெண்களுக்கெதிரான வன்முறைக்கெதிராகவே மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் மேற்படி 15 அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து அறிக்கையை வெளியிட்டுள்ளது

ஏன் மீண்டும் மீண்டும் இத்தகைய வன்முறைகள் இடம்பெறுகின்றன, ஏன் எமது இளைய சமூகம் இவ்வாறு நடந்து கொள்கின்றது. என அவ்வறிக்கையில் வினா எழுப்பப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மகா சக்தி நிலையம், திருகோணமலை காந்திசேவா நிலையம், ஆகியவை உட்பட பல அமைப்புக்கள் இணைந்து இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளன. (சு-60)

## மாங்குளம் பகுதியில் வாகன விபத்து 23 பயணிகள் காயம்

(வவுனியா)

மாங்குளப் பகுதியில் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 23 பயணிகள் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மடு மாதா தேவாலயத்திலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் காயம் அடைந்த அனைவரும் மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7)

## இராசி பலன்

20-8-2000

(ஆவணி 4 ஞாயிறு)

பஞ்சமி

பி. ப 12 52 வரை

ரேவதி

காலை 6.53 வரை

இராகுகாலம்

4 35-6.05

சுபநேரம்

9.05-10.35

**மேடம்**
ஆரோக்கியம்நன்று, எடுத்த காரியம் கைகூடும், தேவையற்ற மனஸ்தாபம்.

**இடபம்**
பிரயாண அலைச்சல், பொருள் வரவு மனக் குளப்பம்.

**மிதுனம்**
தொழில் முயற்சியால், அதிக லாபம், குடும்ப சுகம் புகழ் கிடைக்கும்.

**கடகம்**
தொழில் அதிகாரம், குடும்பக் கவலை, தடுமாற்றம்.

**சிங்கம்**
தந்தையார் வழி துயரம், பிரயாணம், சிறு வியாதி

**கன்னி**
விபத்துக்குள்ளாதல், முயற்சிதாமதம், மனக்குமுறல்

**துலாம்**
விருந்துபசாரம், தொழில் முயற்சி பலிதம், குதூகலம்

**விருச்சிகம்**
புதிய முயற்சி, சந்தோஷசம் பணவரவு

**தனு**
புத்திரரால் சோகம், வயிற்றுக் கோளாறு, உடல் நலம் பாதிப்பு

**மகரம்**
நம்பிக்கைத்சதுரோகம், முயற்சிதாமதம், கஷ்டம்

**கும்பம்**
சகோதரர் வழி உறவு, பொருள் வரவு, பிரயாணம்

**மீனம்**
செய்தொழில் மேன்மை, வீண் வாக்குவாதம், பணக் கஷ்டம்,

[பழைய நேரப்படி கணிக்கப்பட்டது]

வளவன்

## ஓலைக் குடிசையின் கீழ் இயங்கும் 6 பாடசாலைகள்

### கல்விப்பணிப்பாளர் தகவல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயத்தில் ஆறு பாடசாலைகள் ஓலைக் குடிசைகளின் கீழ் இயங்கிவருவதாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் 600 மாணவர்களும் வெறும் தரையில் இருந்தே கல்வி கற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வலயத்தில் 81 பாடசாலைகள் இயங்குகின்ற போதும் 6 பாடசாலைகள் வெறும் கொட்டில்களில் இயங்குகின்றன.

இதே வேளை இலங்கையில் உள்ள கல்வி வலயங்களில் தேசிய பாடசாலைகள் ஒன்றேனும் இல்லாத கல்வி வலயம் பட்டிருப்பு வலயம் மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது. (சு-60)

## மண்ணுக்குள் புதையுண்டு மஸ்கெலிய வாசி மரணம்

### இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டாராம்

[கொழும்பு]

சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மஸ்கெலிய வாசி, மண் சரிவு காரணமாக மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் மரணமானார்.

மேற்படி சம்பவம் டிக்கோயா காசல்றி நீர்த்தேக்கத்தில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் மீட்கப்பட்ட மேலும் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இவ் விடத்தில் சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வில் அண்மையில் ஈடுபட்டிருந்த இருவர் அவ்விடத்திற்கு பொலிஸார் வரவே காசல்றி நீர்த்தேக்கத்தில் பாய்ந்து தமது உயிரைமாய்த்தமை குறிப்பிடத்தக்கது

(உ)

## மட்டக்களப்பு தாந்தாமலைச்சம்பவம் விவசாயிகள் படுகொலை குறித்து மட்டு. எம். பி. ஜனாதிபதிக்கு அறிவிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு தாந்தாமலைப்பகுதியில்வாழைக்காடு என்ற பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் விவசாயிகள் இருவர் கொல்லப்பட்டமை சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இதுவிடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ். திலாந்தன் (வயது - 20) நான்கு பிள்ளைகளின் தந்தையான சதாசிவம் விஜயசுந்தரம் ஆகியோர் (வயது-45) கொல்லப்பட்டனர்.

கடந்த மாதம் 10ம் திகதியன்றும் இதேபகுதியில் கிராம சேவகர் உட்பட இருவர் கொல்லப்பட்டமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

இதுபோன்றசம்பவங்களினால் இப்பகுதிவாழ் பொதுமக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

இதுவிடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு சம்பந்தப்பட்டோர் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் எம். பி. சுட்டிக்காட்டினார். [க-108]

## விசேட பொதுக்கூட்டம்

(அரியாலை)

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய விசேடப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-106)

# கல்வியியல் கல்லூரியின் கற்கைநெறிபற்றிய ஓர் விளக்கம்

திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

| கல்வியியற் கல்லூரி | பாடநெறிகள் |
|---|---|
| 11. ருகுண தே: க. க, மொழிமூலம் சிங்களம், தமிழ் | 1. ஆரம்பக் கல்வி (சிங்களம், தமிழ்)<br>2. கத்தோலிக்கம் 3. சித்திரம்<br>4. நடனம் 5. சங்கீதம் |
| 12. வயப்பா தே: க. க. மொழிமூலம் சிங்களம் | 1. முதல் மொழி — சிங்களம்<br>2. கத்தோலிக்கம் 2. சித்திரம்<br>4. சங்கீதம் 5. நடனம் |
| 13. றுவான்புர தே: க. க. மொழி மூலம் சிங்களம் | 8. ஆரம்பக்கல்வி<br>2. சமூகக்கல்வி |
| 14. புலத்திரிபுர தே: க: க மொழி மூலம் சிங்களம் | 1. ஆரம்பக்கல்வி<br>2. விவசாயம் |

## தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறல்

அரச வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு க. பொ. த. உயரதர கூட்டுப் புள்ளி அடிப்படையில் விண்ணப்பதாரிகள் கல்வியியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப் படுவர் பின்வருவன அனுமதிக்கான பொதுவான தகைமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

★ இலங்கைப் பிரசையாக இருத்தல்
★ 24 வயதிற்கு மேற்படாத வராயிருத்தல் (இது மாற்றத்திற்குள்ளாகக் கூடியது)
★ திருமணமாகதவராகவிருத்தல்
★ வேறுதொழில் புரியாதவராக இருத்தல்

இவை தவிர கற்கைத்துறைகள் அடிப்படையில் பின்வரும் விசேட தகுதிகள் வேண்டப்படுகின்றன.

| துறைகள் | க. பொ. த. சா / த பெறுபேறு | க. பொ. த உ /த பெறுபேறும் பிறவும் |
|---|---|---|
| 1. ஆரம்பக் கல்வி | 6 பாடங்களில் சித்தி போதனை மொழி. கணிதம் உட்பட சித்தி | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி தமிழ் / சிங்களம் உட்பட |
| 2. விஞ்ஞானம் | 5 பாடங்களில் சித்தி போதனை மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட சித்தி | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி, பௌதிகவியல் இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், அல்லது விவசாயம் ஆகியவற்றில் இரண்டும். |
| 3. கணிதம் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழியும் கணிதமும் உட்பட சித்தி | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பௌதிகவியல், இரசாயனவியல், தூய, பிரயோக கணிதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட |
| 4. மனைப் பொருளியல் | 6 பாடங்களில் சித்தி போதனை மொழி உட்பட கணிதம் விஞ்ஞானம் சித்தி | ஒரே அமர்வில் 3 பாடங்களில் மனைப்பொருளியல் உட்பட சித்தி |
| 5. இந்து சமயம் | 6 பாடங்களில் சித்தி போதனை மொழி கணிதம் உட்பட இந்து சமயத்திலும் சித்தி | ஒரே அமர்வில் 3 பாடங்களி சித்தி இந்து சமயம், இந்து நாகரிகம் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட |
| இஸ்லாம் | 6 பாடங்களில் சித்தி போதனை மொழி கணிதம் உட்பட இஸ்லாத்திலும் சித்தி: | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி, இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம், அரபிக் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட |
| புத்தசமயம் | 6 பாடங்களில் சித்தி போதனை மொழி கணிதம், புத்தசமயம் உட்படச் சித்தி; | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி புத்தகலாசாரம், பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டில் சித்தி; |

அல்லது

கூட்டுறவுத் திணைக்கள

## கணக்காய்வாளரின் நியமனம் தொடர்பாகப் பரிசீலிக்கப்படும்

### கூட்டுறவு ஆணையாளர்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப்பற்ற கணக்காய்வார்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக பரிசிலிக்கப்படும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்களின்குறை கேள்சேவையில் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பான கோரிக்கையை வடக்கு - கிழக்கு கூட்டுறவு ஆணையாளர் சுப்பிரமணிய சர்மாவிடம் முன்வைத்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

(க - 03)

கொழும்புமற்றும்கேந்திர இடங்களில்

## வன்முறைகளைத் தூண்டுவதற்கு அரசியல்வாதிகள் முயற்சி

### பாதாளஉலக கும்பலை பயன்படுத்தவும்முடிவு

(கொழும்பு)

பாதாள உலகக் கும்பலை பலரை, எதிர்வரும் பொதுத் தேர்தல்களுக்கு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதற்கென அரசியல்வாதிகள் நியமித்திருந்தமை தெரியவந்திருப்பதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தை. நார ஹேன்பிட்டி, கிருலப்பனை ஆகிய இடங்களில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத்தேடுதலின்போது விசேடபொலிஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலைச்சேர்ந்த 4 முக்கிய நபர்கள் மூலமே மேற்படி தகவல் வெளியாகியுள்ளன.

அத்துடன் மேற்படி நால்வரும் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்தவர் வரும் தினங்களுக்கிடையில் கைதுசெய்யப்பட்டு விடுவர் எனவும் பொலிஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

(உ)

## சைக்கிள் திருட்டு

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரது துவிச்சக்கர வண்டி அலுவலக வளாகத்திலிருந்து திருடர்களால் களவாடப்பட்ட சம்பவமொன்று கடந்த 16 ஆந் திகதி பிற்பகல் வேளை இடம் பெற்றுள்ளது.

அலுவலக வளாகத்தில் நிறுத்தி பூட்டி விட்டு கடமைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரது துவிச்சக்கர வண்டியே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கு முன்பும்பூட்டாத நிலையில் அலுவலக வளாகத்தில் விடப்பட்டிருந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்இருவரது சைக்கிள்களும் களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ - 14)

## இடம்பெயர்ந்தோர் அவலம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து நெல்லியடி கிராம சேவையாளர் பிரிவில் போரூட் நிறுவனத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட முகாமிற்கு குடிநீர் வசதி கடந்த பலநாட்களாக வழங்கப்படாமையினால். அந்த மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் போரூட் நிறுவனம் குழாய்க்கிணறு ஒன்றைகடந்தவாரம் அமைத்துக்கொடுத்துள்ளனர்.

(இ- 18)

## 2நாள் குறைகேள் . . .

[1ஆம் பக்க தொடர்ச்சி]

உடனடித் தீர்வு காணப்பட்ட

அதே போல தேசிய அடையாள அட்டைப் பிரச்சினையில்

| | | |
|---|---|---|
| புத்தசமயம் | ... மொழி கணிதம், புத்தசமயம் உட்படச் சித்தி; அல்லது ஆரம்ப பிரிவேனா இறுதிப் பரீட்சையில் சித்தி; | ... சித்தி புத்தகலாசாரம், பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டில் சித்தி; Or Prebiminary Inter Medial அல்லது தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தி |
| கிறிஸ்தவம் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி, கணிதம், கிறிஸ்தவம் ஆகியவற்றில் திறமைச்சித்தி; | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. தேசிய கத்தோலிக்க சபையின் சமய அறிவுக்கான சான்றிதழ் அல்லது தியோலோஜிக்கல்லூரியினது தகுதிவாய்ந்த சான்றிதழ்கள்; |
| முதல் மொழி | 6 பாடங்களில் சித்தி கணிதம் உட்பட சிங்களம் / தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி; | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியுடன் சிங்களம் / அல்லது தமிழ் திறமைச்சித்தி. |
| சமூகக்கல்வி | 6 பாடங்களில் சித்தி கணிதம், போதனாமொழி, வரலாறும் சமூகக்கல்வியும், உட்பட; | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல் வர்த்தகம், புவியியல் ஆகியபாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி; |
| விவசாயம் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி கணிதம், விஞ்ஞானம் உட்பட; | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி விவசாயம் உட்பட. |
| தொழில்நுட்பக்கல்வி | 6 பாடங்களில் சித்தி தச்சுத்தொழில், மேசன், உலோகவேலை, மோட்டார் பழுதுபார்த்தல், றேடியோ நுட்பம், நெசவு, மட்பாண்டத் தொழில், ஆகியவற்றில் ஒன்றிலும் கணிதம், போதனா மொழியிலும் சித்தி; | ஒரே அமர்வில் 3 பாடங்களில்சித்தி |

## 2நாள் குறைகேள் . . .

[1ஆம் பக்க தொடர்ச்சி]
உடனடித் தீர்வு காணப்பட்டதாகவும் மீதியாகவுள்ள 580 பிரச்சினைகளுக்கு இவ் இரு தினங்களிலும் தீர்வு காணப்படவில்லை. ஆயினும் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நேற்று மாலை மத்திய கல்லூரியில் ஈ.பி.டி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சி. தவராசா பத்திரிகையாளர் மத்தியில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: இச் செயலமர்வின் போது கல்வியில் 263 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு அவற்றுள் 124 பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காணப்பட்டதாகவும்,

அதே போல பிரதேச செயலகங்கள் தொடர்பான திவாரணக் கொடுப்பனவு பற்றி 108 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு35 பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டது;

சுகாதாரத்துறையில்46 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு 16 பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு காணப்பட்டது; உள்ளூராட்சித் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட 59 பிரச்சினைகளில் 9 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன;

அதே போல தேசிய அடையாள அட்டைப் பிரச்சினையில் 19 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு 14 பிரச்சினைகள் உடனடியாகத் தீர்வு காணப்பட்டன என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் அங்கு அவர் தெரிவிக்கையில்: இச் செயலமர்வுத் திட்டத்தினை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என எமது கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தா விரும்பினார்.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்களின் பல பிரச்சினைகளுக்குத் துரித கதியில் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கில் தான் இது நடத்தப்பட்டது எனவும் இதனை விட வேலைவாய்ப்பு உட்பட வேறு பல பிரச்சினைகள் தொடர்பாக 500 க்கும் மேற்பட்ட மக்கள் ஈ.பி.டி.பியின் தலைமைச் செயலகத்திற்கு வந்திருந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டின் போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் சமூகமளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(த-77

## இன்று ஒரு தகவல்

# பரிவோடு பழகுதல் பாரில் நன்மைபலவற்றை உண்டாக்கும்

லியோ டால்ஸ்டாய்ரஷ்யா வைச் சேர்ந்தவர்|அவர்காலத் தில் ரஷ்யாவில் பிச்சைக்கா ரர்களின் தொல்லை அதிகம் ஒரு சமயம் அவர் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது பிச்சைக்காரன் ஒருவன் அவரை வழிமறித்து அவர் சட்டையைப் பிடித்திழுத்து

''ஐயா பிச்சை'' ஏன்று கேட்டான்.

டால்ஸ்டாய் இளகிய மன முடையவர். பரிவு நிறைந்த வர் பிச்சைக்காரனுக்கு ஏதா வது காசு கொடுக்க வேண் டும் என்ற ஆதங்கத்தில் டால்ஸ்டாய் தன் சட்டைப் பைக்குள் கையைவிட்டார். அதில் ஒரு காசுகூட இல்லை.

தம்பி கையிலே பணமில் லையே என்று சொன்னார் இதைக் கேட்டவுடன் பசி யால் வதங்கிப் போயிருந்த பிச்சைக்காரன் முகத்தில் என்றுமில்லாத ஓர் ஒளி பிறந் தது.

பிச்சைக் கொடுப்பதைக் காட்டிலும் பெரிய ஓர் உத வியை நீங்கள் இன்று எனக் குச் செய்து விட்டீர்கள் ஐயா, தம்பி! என்றல்லவா என்னை அழைத்து விட்டீர்கள் அது போதும் என்று சொன்னான் பிச்சைக்காரன்.

தன்னைக் கொஞ்சமும் மதிக்காத இந்த உலகத்தில் தன்னையும் ஒரு மனிதனாக மதித்து ''தம்பி'' என்று உறவு கொண்டாடிய டால்ஸ் டாயிடம் பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட் டது.

கேவலம் பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்க ளுக்கு கிட்டிவிடுகிறது. என்ப தற்கு டால்ஸ்டாய் வாழ்க் கையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி நல்ல ஓர் உதார ணம்.

உலகத்திலுள்ள துன்பங் கள் பலவற்றிற்கும் காரண மாக இருப்பது பரிவின்மை தான்.

அந்தப்பரிவை எப்படி பெறு வது?

நாள்தோறும் கொஞ்ச

முடியவில்லை. அவனுடைய கொடுங் கோன்மையை நினைத்தால் இரவில் தூக் கம் வருவதில்லை. ஆதலால் வேலையை விட்டுவிட வேண் டும் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். அதற்குமுன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்றுவந்தேன். என்ன சொல்கிறீர்கள்? என்று பரபரப்போடு கேட் டாள்.

அவள் சொன்னதை பொறு மையாக் கேட்டுவிட்டு மருத் துவர் சொன்னார்' அம்மா' நான் ஒரு யோசனை சொல் கிறேன் அதன்படி 3 மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என் னிடம் வா. பிறகு ராஜினா மாவைப் பற்றிச் சிந்திப் போம் என்றார்.

அவர் சொன்ன யோசனை இதுதான். ''சுடுமூஞ்சியிட மும் சில நல்ல குணங்கள் பதுங்கிக் கொண்டிருக்கும். அவற்றைத் தேடிப்பிடித்து, வாயார அவற்றை பாராட்டு, ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக் கொள் என்று சொல்லியனுப்பினார்.

இந்த ஆலோசனையை அப் பெண் பின்பற்ற ஆரம்பித் தாள்.

மறுநாள் சுருக்கெழுத்து எழுதுவதற்கு தன் அதிகாரி யிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழ காக இருந்தது. அதை உள் ளன்போடு பாராட்டினாள் அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்து நடையின் சிறப்பை உணர்ந்து பாராட் டினாள். இப்படியாகப் பாராட்டு ஏற, ஏற அதிகாரி யின் சுடுமூஞ்சித்தனமும் கொஞ்சம், கொஞ்சமாக மறைந்தது. முடிவில் அவன் அவளுடைய அன்பார்ந்த காதலனாகிவிட்டான்,

3 மாதம் கழித்து அப் பெண் மருத்துவரைப் பார்க் கச் சென்றாள். 'என்னம்மா வேலையை இராஜினாமா பண்ண வேண்டியதுதானே' என்று கேட்டார் மருத்துவர்.

ஐயோ, இராஜினாமாவா? பாருங்கள் இதை! என்று சொல்லி தன்னுடைய அதி காரி தனக்கு பரிசளித்த வைர மோதிரத்தை அவள் காட்டி னாள்; பரிவினால் வந்த

## நல்லையில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேர வையின் நல்லைக் கந்தன் உற் சவகாலத் தெய்வீக நிகழ்ச்சி கள்தொடரில் இன்று ஞாயிற் றுக்கிழமை ''அறிவியல் நோக்கில் ஆன்மீகம் என்னும் தலைப்பில் பிரம்ம ஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா சொற் பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் மடத்தில் பி.ப. 2. 00 மணிக்கு இடம் பெற வுள்ளது.

(செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இன்று 20 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதி வரை மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெற உள்ளது.

நல்லூர் மேற்கு வீதியில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண் டபத்தில் தினமும் மாலை 5. 00 மணி முதல் 6. 00மணி வரை நல்லை குருமணியின் பிரதம சிஷ்யன் காகைதா வாரிதி பிரம்மஸ்ரீ சி.வ. வை. நித்தியானந்த சர்மா மேற் படி சொற்பொழிவினை நிகழ்த்துவார்.

இன்றைய நிகழ்வில் ''திரௌபதி கல்யாணம்'' என்ற விடயம் பற்றி சொற் பொழிவு ஆற்றுவார். [க]

## நினைவு

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மூத்த எழுத்தாளர் நாவேந் தன் நினைவு அஞ்சலிக் கூட் டம் இன்று ஞாயிறு காலை 10. மணிக்கு நடைபெறும்.

ஆரியகுளத்தில் அமைந் துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன் றிய மண்டபத்தில் நடை பெறும். இக்கூட்டத்திற்கு செங்கை ஆழியான் தலைமை தாங்குவார். அஞ்சலிஉரைக ளும் நடைபெறும். (த)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரியில் வசிக்கும் சரவணமுத்து பரந்தாமன் என்பவரது விசேட அடையாள அட்டை யும், தேசிய அடையாள

உ

## நல்லூரான் திருவடிக்கு - 16



## நல்லூர் கந்தன் பாமாலை

அஞ்சிப்பயந்து அகதிகளாய் ஓடாமல்
கெஞ்சுகிறோம் கண்கண்ட தெய்வமுனைத்-தஞ்சமளி
காக்கக் கடனுனக்கு கந்தா நல்லூரானே
ஆக்க மருள் அச்சம் அகற்று

இறைமணி சி. இராசரத்தினம்

## எமை ஆண்டாய் ஆறுதலைத்தா!

நல்லைக் குமரா, நறுந்தண் தார் மார் பழகா,
எல்லையிலாக் கருணை ஏந்தலே- தொல்லையினால்
வாடும் எங்கள் நெஞ்சிற்கு வலுவூட்ட அருள் சுரப்பாய்
ஆடு மயில் வாகனத்தப்பா!
துன்பம் எங்கள் சொத்தோ? துயரம் எங்கள் சீதனமோ?
இன்பம் எமக்கு எட்டிக் காயாமோ?-மின் நெடுவேல்
கொண்ட குமரா குறைதீர எமையெல்லாம்
ஆண்டெமக்கு அடைக்கலம் தா!
ஆறுதலை கொண்ட அருட்குமரா வேலவா
தேறுதலை எமக்கருள மாட்டாயோ- மாறுதலைக்
கொண்ட கொடும் பகைவர் கொட்டம் அடக்கி எமை
ஆண்டாய் ஆறுதலைத் தா;

ப. ஆரூரன்

## கொஞ்சும் வேலுண்டு குலைவதேன் மனமே

அஞ்சுக மங்கையர் அருகினில் இருக்க
மஞ்ஞை மீதேறி மாநிலம் புரக்கும்
பிஞ்சு முகத்துப் பேசாப் பெம்மான்
அஞ்சும் அகத்தை ஆள்பவன் ஆனால்
துஞ்சும் மக்கள் துயர் துடைத் தென்றும்
நெஞ்சில் நிறைவான் நெடுமால் மருகன்
அஞ்சியே பகைவர் கடிதினில் ஓட
கொஞ்சும் வேலுண்டு குலைவதேன் மனமே
நெஞ்சைப் பிளக்கும் நெடிய ரூஷல் அலைகள்
துஞ்சிமடியும் மானிடக் குவியல்
கொஞ்சமோ இங்கு குமரா குருவே
அஞ்சி அஞ்சி அவனியில் வாழ
குஞ்சரி மணாளா குன்றில் உறையும்
செஞ்சடைப் பரமன் சின்னக் குழந்தை
அஞ்சினோர்க் கருள அயிலொடு வருக
கெஞ்சு கின்றோ மூனை கேடினை அகற்று

மோ. பா. நீரஜா

## எம்மை ஆட்கொண்டருள்வாய்

இராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

எடுப்பு

அந்தப்பரிவை எப்படி பெறுவது?

நாள்தோறும் கொஞ்ச நேரமாவது நம்மைப் பற்றிய சிந்தனையிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு கூடு விட்டுக் கூடு பாய்ந்து, மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயலுவோமேயானால், டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் கைவரும்.

நியூயோர்க் நகரத்திலிருந்த ஒரு மனநல மருத்துவ நிபுணரிடம் ஆலோசனைக் கேட்பதற்காக ஒரு பெண் வந்தாள்.

நான் ஒரு தொழிற்சாலையின் தலைமை அதிகாரியிடம் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சுடுமூஞ்சி என்னால் அவனுடைய கோபதாபங்களையெல்லாம் தாங்க சொல்லி தன்னுடைய அதிகாரி தனக்கு பரிசளித்த வைர மோதிரத்தை அவள் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. விரைவில் அதிகாரிக்கும் அவளுக்கும் திருமணம் நடந்தது.

நம்மைச் சுற்றியிருப்பவர்களிடம், நம்மிடமிருப்பது போலவே, பல குற்றங்கள் இருக்கலாம். அவற்றைக் கொஞ்ச நேரமாவது மறந்துவிட்டு அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து நாம் பாராட்டக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால் நம்மிடமிருக்கும் வெறுப்பும் நம்மை விட்டு அகலும், மன அமைதியும், பிறரிடம் நல்லுறவும் வளரும். இங்கிதம் பெருகும். சமுதாயத்தில் மங்களம் பொங்கும்.

தென்கச்சி சுவாமிநாதன்

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

பொலநறுவை அரணகங்கில பகுதியில் கடந்த 8 ஆம் திகதி இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலின் போது,

★ லெப்: ஜூலியன் (செல்வராஜா சிவராவி)

மட்டக்களப்பு

★ லெப்: கருணாகரன் (இராஜசுந்தரம் கோகுலதீபம்) மட்டக்களப்பு

ஆகிய போராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(க-07)

வசிக்கும் சரவணமுத்து பரந்தாமன் என்பவரது விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

(சு)

## பெரியபுராண படணம்

(புலோலி)

தென் புலோலி வெள்ளுருவை நின்ற அந்தாய் (சின்னத்தாய்) ஆலயத்தில் பெரிய புராண படணம் இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகின்றது.

இப்பெரிய புராண படணப்பூர்த்தி விழா அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(க-52)

## வல்லைப்பாலம் சீரில்லை

(செம்பியன்பற்று)

வடமராட்சி வல்லைப் பாலம் சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் அப்பாதை ஊடாக போக்குவரத்து செய்யும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்

(க-42)

## எமை ஆட்கொண்டருள்வாய்

இராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

எடுப்பு

நாதவடிவான நாயகனே-நல்லை
வேலவனே உமை பாலகனே...
(நாதவடிவான)

தொடுப்பு

சோதனை செய்யாது சுகமெமக்கீந்திட
கோலமயிலேறி குமரா நீ வரவேண்டும்
(நாதவடிவான)

முடிப்பு

நல்லைப் பதியினிலே நாதனே நீயிருக்க
அல்லலுற்று நாம் அலைவது ஏனையா
வல்வினை தீராபோ வடிவேல் அழகனே
வள்ளி தேவயானையுடன் வந்தெமை
ஆட்கொள்வாய்.

திருமதி ம. நவரத்தினம்

## கந்தா! காத்தருள்வாயா.!

கந்தா! குகனே கதிர் வேலவனே!
கண்திறந்து பாராய் மக்கள்
படும் வேதனைகளைத் தீராய்
தினம் இடப் பெயர்வுகளிற்கும்
இன்னல்களிற்கும் முகங் கொடுத்தே
இச்சை யின்றி வாழ்கின்றோம்
உன் இனிதான வரங்கிடைக்கவே
உன்னடி தேடி வந்தோம்
ஆனாலும் நீதான் ஊமையாய் இருப்பதேனோ?
கருணைக் கந்தா கதறி அழுகிறோம்
காத்திடத்தான் வாரும் ஐயா
மயிலேறும் மன்னவனே! எம்
மனக் குறை தீர்ந்து மகிழ்வுடன்வாழ
இனிதாக அருள் செய்யுமப்பா...

இ. தாசன்

# உலக தரிசனம்

# "தகாஸ்ட்" கப்பல் நீரில் மூழ்கியமை
# ரஷ்யகடற்படையின்பலவீனத்தையேகாட்டுகிறது

## அரசியல் நோக்குநர் கருத்து

(மொஸ்கோ)

ரஷ்ய கடற்படைக்குச் சொந்தமான ''தகாஸ்ட்'' என்ற பெயருடைய அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் கடலின் அடியில் சிக்கியுள்ளதானது ரஷ்யக் கடற்படையின் பலவீன நிலையை கோடிட்டுக் காட்டியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

செச்சினியப் போராளிகளுடனான மோதல்களின்போது ரஷ்யாவின் தரை மற்றும் விமானப் படைகளின் தாக்குதற் திறன்களின்அளவுமிகக் குறைந்த நிலையில் இருப்பது வெட்ட வெளிச்சமாகியது.

தற்போதுரஷ்ய கடற்படையின்திறமைகளையும்,ஆயுதக் கட்டமைப்புகளையும் அளவிட,நீர் மூழ்கிக்கப்பலில் உள்ள நூற்றுக்கணக்கான மாலுமிகளை மீட்கும் முயற்சிகள் தொடர் தோல்விகளைச் சந்தித்து வருவது நல்லதோர்குறிகாட்டியாகஅமைந்திருப்பதாக அரசியல்நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மொத்தத்தில் ரஷ்ய பாதுகாப்பு படைகளின் முழுவல்லமையுமே நீர்மூழ்கிக் கப்பலின் மீட்பு விவகாரம் மூலம்வெளி உலகத்திற்குத் தெரியவந்துள்ளது.

இதனிடையே, அணுவாயுத உற்பத்திகளுக்கு ரஷ்ய நாடு செலவிடும் பெருந்தொகை வளங்களை பாதுகாப்புப் படைகளின் கட்டமைப்புகளை பலப்படுத்துவதிலும், நவீனத்துவப் படுத்துவதிலும் செலவிடுவது ரஷ்யாவின் எதிர்கால இருப்பை ஸ்திரப் படுத்தும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை,''தகாஸ்ட்'' என்ற மேற்படி அணுவாயுத நீர் மூழ்கிக் கப்பல் ஆபத்தில் மாட்டிக்கொள்ள,மோசமான பராமரிப்பு ஊழியர்களுக்கு போதிய பயிற்சியின்மை மற்றும் மாலுமிகள் கப்பலில் பூரணமான சேவையாற்றாமை என்பனவே காரணம் என்பதை ரஷ்யஆளும் தரப்பு ஒப்புக்கொண்டுள்ளது.

சோவியத் யூனியனாக இருந்தகாலத்தில்,ரஷ்யாஆற்றல் மிக்க கடல் மற்றும்தரை விமான கலங்களையும், ஆயுதங்களையும் உற்பத்தி செய்து உலகெங்கும் விற்பனை செய்து வந்த போதிலும்,சோவியத் யூனியன் பல்வேறு குடியரசுகளாக பிளவுபட்டதையடுத்தே இப்பரிதாபநிலை ஏற்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில்,ரஷ்ய முப்படைகளினதும் அவசிய அவசர சீர்திருத்தத்தின் அவசரத்தை தற்போதைய அணுவாயுத கப்பல் ஆபத்தில் சிக்கியுள்ள நிலைமை தோற்றிவித்துள்ளதை ரஷ்ய அரசு உணர்ந்து கொண்டுள்ளது. (க-உ)

## தாய்லாந்தின் அதிக எடையுள்ள பெண்மணி

(பாங்கொக்)

தாய்லாந்தில் அதிக எடையுள்ள பெண்களைத் தெரிவு செய்யும் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் பண்டா இதாலக்ஸானா என்ற 34 வயதுடைய பெண் முதலாம் பரிசைத் தட்டிக்கொண்டார்.

இவரின் எடை 187 கிலோ என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறேசில் சிறைக் கலவரத்தினால் 11 பேர் உயிரிழப்பு கைதிகள் தப்பினர்

(மனோஸ்)

பிறேஸிலில் உள்ள பிறேஸியா பபூடா என்ற சிறையில் ஏற்பட்ட கலவரத்தினால் 11 பேர் பலியாகியுள்ளனர்.

கைதிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு மற்றும் தீ வைப்புகளால் சிறையில் இருந்த 1 இலட்சம் கைதிகள் அவஸ்தைப் பட்டதாகவும், இதனையடுத்து சிறை அதிகாரிகள் சுவர்களை உடைத்து கைதிகளை விடுவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி கொடூரமான கைதிகள் தப்பியோடிவிட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (து)

## இந்திய மத்திய அரசு சிறுபான்மை மக்களுக்கு விரோதமல்ல
### அத்வானி தெரிவிப்பு

[புதுடில்லி]

தேசியஜனநாயக கூட்டணி அரசு சிறுபான்மை இன மக்களுக்கு விரோதமானதென்ற பிழையான கருத்தினை போக்குவதற்கு மும்முரமாக பாடுபடப்போவதாக மத்திய உள்துறை அமைச்சர் எல். கே அத்வாணி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மதம் மற்றும் இன வன்முறைகள் பற்றி பாராளுமன்றில் எழுப்பப்பட்ட பிரச்சினைக்குட்பதிலளித்துப் பேசுகையில்,பல் வேறு மாநிலங்களில் கிறிஸ்தவதேவாலயங்கள் தாக்கப்பட்டது தொடர்பாக அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் இது தொடர்பாக தீம் தார்அஞ்சுமன் இயக்கத்தைச் சேர்ந்த 35 பேர் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

## கிரிக்கெட் சூதாட்ட ஊழல் பற்றிய அறிக்கை வந்ததும் சட்ட நடவடிக்கை
### மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

கிறிக்கட் சூதாட்ட ஊழல் குறித்து மத்திய புலனாய்வுத் துறை விசாரித்து வருவதன் இடைக்கால அறிக்கை செப்டெம்பர் நடுப்பகுதிக்குள் வெளிவந்துவிடும் என்று மத்திய விளாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்முக்கியமுன்னாள் கிறிக்கட் வீரர்கள் கிறிக்கெட்சபை உறுப்பினர்கள் போன்றோர்கள்விசாரிக்கப்பட்டு வந்துள்ளார்களென்றும்அவர்கள் சம்பந்தப்பட்ட இந்த அறிக்கைகள் வந்ததும் உரியவர்கள் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (து)

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அல்கூர் எனது தந்தை என்பதற்காக நான் வாக்கு கேட்க வரவில்லை
### மகள் கரினா கோசிப் உரை

[லொஸ்செஞ்சர்]

ஜனாதிபதியாகப் போட்டியிடும் அல்கூர் தந்தை என்பதற்காக நான் வாக்குக் கேட்க வரவில்லை. மாறாக அவர் எல்லாக் குழந்தைகளுக்கும் நன்மை செய்பவர் என்பதற்காகவே வாக்குக் கேட்கிறேன் என்று கரினா கோசிப் உரையாற்றும் போது கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் அல்கூரின் மகளான கரினா கோசிப் தந்தைக்கு ஆலோசகராக இருந்து வருகிறார். சட்டத்தரணியான இவர் தொடர்ந்து லொஸ்செஞ்சரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அல்கூர் அவர்கள் நல்லதை செய்வார் என்றும் உயர் நிலைகளுக்குச் செல்ல வேண்டுமாயின் மேடான பாதைகளில் பயணம் தொடர வேண்டும் என்ற நம்பிக்கையுள்ளவர் அவர் என்றும் 27 வயதான கரினா கோசிப் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொடுப்பதில் வல்லவரான இவர் தந்தையைப் பின்பற்றிய அமெரிக்க அரசியலில் காலடி எடுத்து வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது. (து)

## கற்பாறையில் பூச்செடி வளர்க்கும் கல்கத்தா யுவதி

[புதுடில்லி]

கல்கத்தாவில் ஒரு பெண், பாறைகளிலும் பெருங்கற்களிலும் வெற்றிகரமாக மலர் செடிகளை நட்டு வளர்த்து வருகிறார்.

இந்திரா ஷகாபுதீன் என்ற இப்பெண் கடந்த 10 ஆண்டுகளாக இந்தச் சோதனை முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் சுவரின் இடுக்குகளில் இப்படிச் செடிகள் வளர்வதைக் கண்டு இம்முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறுகிறார்.

இவர் இப்பொழுது பழமரங்களை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டும் வருகிறார். (து)

## தனியார் பஸ் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதில்; 50 பேர் பலி!

[புதுடில்லி]

மத்தியப் பிரதேச மாநிலத்தில் பனார்ஸ் பகுதி ஆற்றில் தனியார் பஸ் ஒன்று அடித்துச் செல்லப்பட்டதில் 50 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த பஸ்ஸில் 60 பேர் பயணம் செய்ததாகவும் 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டு விட்டனரென்றும் 23 பேரின் சடலங்கள் சுழியோடிகள் மீட்டனரென்றும் பஸ்வண்டியும் கிறேன் மூலம் எடுக்கப் பட்டதாகவும் மற்றவர்களை மீட்பதற்கு ஹெலிகொப்டரின் உதவியை நாடியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. )து)

## செய்திப்பரல்

★ பாகிஸ்தான் இராணுவம் எல்லைப்புறங்களில் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 20வீடுகள் இந்தியப் பகுதியில் சேதம். 6பேருக்குகாயம் ஏற்பட்டது.

★ கர்நாடக தமிழக அரசுகளின் 450பக்கங்கள் கொண்ட அறிக்கையை கோபால் வீரப்பனிடம் கையளிப்பார்.

★ பாலஸ்தீனத் தலைவர் ஜஸீர் அரபாத் புதுடில்லியில் வாஜ்பாயுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

★ பலஇன ஆட்சியை பிஜியில் ஏற்படுத்தஉதவுவதாக இந்தியப்பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

★ அஸ்ஸாமில் தடை செய்யப்பட்ட தீவிரவாதக் குழுக்களை பேச்சு நடத்த வருமாறு அஸ்ஸாம் முதல்வர்கேட்டுள்ளார்.

★ தென்னை மரத்தை அரிக்கும் பூச்சியை அழிப்பதற்கான புதிய மருந்தை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கண்டு பிடித்துள்ளது. (து)

## அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்திற்கு தவறான முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறதா?
### மதன்லால் குரானா சந்தேகம்

[புதுடில்லி]

ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டு தவறான முறையில் அமைச்சர் ரங்கராஜன் குமார மங்கலத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்று அசோகா தனியார் மருத்துவமனை மீது மதன்லால்குரான்ா சந்தேகம் எழுப்பினார்.

இந்திய பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மதன்லால் குரானா பேசுகையில்; டில்லி அசோகா தனியார் மருத்துவமனையில் மின்சாரத்துறை அமைச்சர் ரங்கராஜன் குமார மங்கலம் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு 20நாட்கள்இருந்திருக்கிறார். ஆனால் நோயைக் கண்டுபிடிக்காமல் தவறான முறையில் சிகிச்சையளிக்கப்பட்டுவந்திருக்கிறது. ஆனால் எதுவித பயனில்லை என்று கேள்வி எழுப்பினார்.

இதனால் தொடர்ந்து பாராளுமன்றத்தில் பலரும் மருத்துவமனை மீது கண்டனம் தெரிவித்தார்கள்.

இதே போன்று கண்டனத்தை ரங்கராஜன் குமார மங்கலத்தின் மகனும் எழுப்பியுள்ளதால் இதுபற்றி விசாரிப்பதற்கு விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று பாராளு மன்ற விவகார அமைச்சர் பிரமோத் மஹோஜன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அசோகா மருத்துவ மனை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; தாங்கள் சரியான பரிசோதனை முறையில் காய்ச்சலுக்குசிகிச்சை அளித்ததாகவும் மார்பு சம்பந்தமான பல பரிசோதனைகள் செய்யப்பட்டதாகவும் அமைச்சர் ரங்கராஜ குமார மங்கலத்திற்கு வேறுஎவ்விதகோளாறுகளும் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சரை அடிக்கடி மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெறுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டும் கூட அவர் இது விடயத்தில் போதிய அக்கறை காட்டவில்லை என்றும், மேற்படி மருத்துவமனை அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமைச்சருக்கு இரத்தப் புற்று நோய் காணப்படுவதற்கான எந்த வித அறிகுறிகளும் இல்லை என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் அமைச்சர் குமார மங்கலத்தின் உடல் நிலையில் எவ்விதமுன்னேற்றமும் இல்லையென்றும் தொடர்ந்து அபயகரமான கட்டத்திலேயே உள்ளதாகவும் நேற்றுப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்துள்ளன. (க-து)

ஒப்புரவினால் வரும்கேடெ
னின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கதுடைத்து
-குறள்

# வலம்புரி

## நிம்மதிமலர் வதெப்போ?

கடவுள் யாரை அழிக்க விரும்புகிறாரோ அவர்களை முதலில் பைத்தியம் பிடித்து அலையச் செய்கிறார் என்பது ஷேக்ஸ்பியர்வாக்கு. பேரின வாதம் அந்தக் கட்டத்தை அடைந்து விட்டது.

நதிகள் பின்னோக்கிப் பாய்வதில்லை என்பது அன்றைய பிரதமமரும் இன்றைய ஜனாதிபதியின் தந்தையுமான பண்டார நாயக்காவின் கூற்று. அது ஒரு சத்தியவாக்கு. அகிலமே ஏற்றுக் கொள்ளும். நதிகள் பின்னோக்குவதில்லை என்றால் அலைகளும் பின்னோக்க மாட்டாது தானே. ஓயாத தன்மையும் பின்னோக்காத தன்மையும் அதற்கு உண்டு என்பதை உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

நீதியின் குரல்வளையை நெரித்துக் கொண்டு நிம்மதியாக வாழலாம் என்று வரலாறு இல்லை. நீதி செத்தகாரணத்தால் எண்ணற்ற உயிர்கள் பசியால், பட்டினியால் பொல்லாத போர்க்கருவிகளால் ஏன் எதற்கு என்ற வினாவிற்கு விடையில்லாமல் செத்து மடிகின்றார்கள். இந்த நிலை நீடிக்க மாட்டாது என்ற பேருண்மை யொன்று புலராமல் இல்லை.

காலத்துக்கு க் காலம் புல்லுருவிகள் தங்கள் நலனுக்காக நாடகமாடி இலக்கை மறைக்கிறார்கள். கொடுக்கும்விலையை கொன்றொழிக்கிறார்கள் ஆண்மிவரும் நிம்மதியை எட்ட வைக்கிறார்கள். உண்மையின் இந்தக்கோடரிக்காம்புகளைச் சுட்டெரிக்க வேண்டும். மண்ணிலே கால் பதிக்காது விரட்டப்படவேண்டும்.

# புதன் சூரியனுடன் இணைந்து உச்சம் பெறின் அந்த ஜாதகருக்கு கல்வியில் உயர்வு உண்டு

பிறந்த குழந்தை வளர்ந்து பள்ளிப் பருவத்தை அடையும் சமயத்தில், அதற்கு ஏற்படக்கூடிய இயல்பான பிரச்சினைகள் பல விதம் வந்து ஆட்கொள்ளுகிறது.

சிலருக்குக் கல்வி சரளமாக வரும். மற்றுஞ் சிலருக்கு மந்தமாக இருக்கும். இன்னுஞ் சிலருக்கு விட்டு விட்டு கல்வி தொடரும். கல்வி விடுபட்டது விடுபட்டதாகவே ஆவதும் ஒரு சிலருடைய தலை விதி வசமாக அமைந்து விடுவதும் உண்டு. இதற்கு எப்படிப்பட்ட மாற்று முறையை ஏற்றுக் கடைபிடிக்க வேண்டும் என்பதை அவரவர் ஜாதக வாயிலாகக் கண்டறிந்து, அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

கல்வி கற்கும் பிராயத்தில் எப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் எதிர்நோக்க வேண்டிவரும் என்பதைப் பற்றிக் கீழே குறிப்பிடப்படுகின்றது அது விஷயத்தை முன் கூட்டி அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

### பட்டப்படிப்பு

வித்தைக்கு அதிபதி புதன் என்பதால்; புதனை 'வித்தியாக்காரன்' என்று சொல்லுகிறோம். இப்படிப்பட்ட புதன் சூரியனுடன் கூடி, ஜெனனலக்கினம் எட்டாமிடம் ஆகியவற்றில், இடம் பெற்று இருந்தால், அந்த ஜாதகருக்கு, பட்டப்படிப்பு அமையும். சூரியனும் புதனும் பிரிந்து இருந்தாலும், புதன் 3-6-12ல் மறைந்து, பகை நீச்சம் பெற்று இருந்தாலும் கல்விஸ்தானமான இரண்டாம் இல்லத்தில் அங்காரகன் இருந்தாலும், அந்த ஜாதகருக்குக் கல்வியில் பல வித தடவைகள் ஏற்பட்டும் குரு பார்வை இல்லை என்றால் தடைபட்ட கல்வி மீண்டும் தொடராது. விட்ட குறை தொட்ட குறையாக கல்வி அமைப்பு அத்துட நின்று விடும்.

ஒரு ஜாதகத்தில் சூரியனும் புதனும் கூடி இருந்தால், அவருக்குக் கல்வியில் சரளமான போக்கு இருக்கும். அத்துடன் சுக்கிரன் கூடி இருந்தால், கல்வியில் சாதாரணமாகத் தடைகள் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகும் இப்படிப்பட்ட சுக்கிரன் குரு பார்வை பெற்றால் கல்வி தடை நீங்கி மீண்டு முற்போக்கான கல்வி அமையும்.

புதன் வித்தைக்கு அதிபதி. குரு தனத்திற்கு அதிபதி. இவ்விருவரும் ஒரு ஜாதகத்தில் எங்கு கூடி இருந்தாலும், புதன் பலம் பெற்றால், அவருக்கு கல்வியில் பூரண வளர்ச்சியும் பட்டம் பதவியும் உண்டு. குருபலன் அற்று இருந்தால் கல்வியில் சுணக்கம் தடை ஏற்பட்டு, பெருள் வளத்தில் சிறப்பு காண்பார். கல்வியில் மட்டும் பிரச்சினை உண்டு.

கல்விப் பயிற்சிக்குக் குரு பக்தி அவசியம் தேவைப்படுகிறது. குருவின் வாசம் இல்லாதவர்கள் கல்வியின் முழு பயனை அடையமுடியாது.

ஜெனனலக்கினத்திற்கு 6ல் கேது இருப்பவர்களும். மன்னன் என்று செல்லக்கூடிய குருவுக்கு 6.8-12ல் மதி என்ற சந்திரன் இருப்பவர்களும், தகாத செயல்களில் துணிந்து ஈடுபடுவார்கள். இது தவிர, புதன் பகை அல்லது நீச்சத்தில் உள்ளவர்களும் கூட தாம் கெடுவது அல்லாமல், மற்றவர்களை தமது பிடிக்குள் கொண்டு வந்து அவர்களையும் கெட வைப்பார்கள்.

### பொறியியல் கல்வி

சனியும் அங்கரனும் கூடி இருந்தாலும் அல்லது ஒருவரை ஒருவர் பரஸ்பர பார்வை பெற்று இருந்தாலும் அந்தஜாதகருக்கு மெஷினரி கல்வியும், என்ஜினியரின் கல்வியும் சரளமாக வரும். அதில் பட்டமும் பெறக்கூடிய பாக்கியமுண்டாகும் இப்படிப்பட்ட அன்பர்களுக்கு, கணிதத்துறையுடன் கூடிய கல்வியும் சட்ட மருத்துவ பேங்கிங் கல்வியும் சரிபட்டு வராது. பிரச்சினையும் காட்டும்.

ஜெனன் லக்கினத்திற்கு 5-ம் இல்லம், மனம்—சித்தம் சிந்தனை—தன்மானம்- பூர்வ புண்ணியம் புத்திரம் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமாகும். இந்தஸ்தானத்தில், சுபகிரகங்களான குரு—சுக்கிரன் புதன் இருக்க வேண்டும். சனி இருப்பினும் பரவாயில்லை. சனியும் சுபகிரகமொன்று அல்லது இரண்டும் கூடியிருந்தாலும் அவருக்கு சட்டக் கல்வியில் பட்டம் பெறவும், அட்வகேட் என்றும் பிரபல மாஜிஸ்ட்ரேட் நீதிபதி என்று பெயர் பெறவும் சாத்தியமாகும்.

**ஏ. எம். பிள்ளை**

ஜெனன லக்கினத்திற்கு 1-2-4-10-11ல் புதன் உள்ளவர்கள் மட்டுமே, கணிதத் துறையுடன் கூடிய ஆடிட்டர் பட்டப் படிப்பைப் படித்து அதில் வெற்றியும் வருவாய் யோகமும் பெறமுடியும். அப் புதனுடன் சூரியன் கூடி இருந்தால், இன்னும் பிரபல யோகம் தருவதாகஇருக்கும். சந்திர கேந்திரத்தில் புதன் இருந்தாலும், இப்படிப்பட்ட யோகம் சித்திக்கும். இப்படிப்பட்ட நிலைமைக்கு மாறான நிலைஉடைய ஜாதகர்கள். ஆடிட்டிங் துறையில் பட்டம் பெற முயற்சிப்பது சரியல்ல. இது பிரச்சினைக்கு உரியதாகவே இருக்கும் என்பது பொது விதி.

### நீதி நிதித்துறை

ஒருவர், நிதி அல்லது நீதித் துறையில் பட்டப்படிப்பு பெற்று அவர் அதன் வழியில் உத்தியோகம், வருவாய் யோகம் பெற வேண்டுமானால், அவருடைய ஜெனன ஜாதகத்தில், ஜீவனஸ்தானமான 10ம் இல்லத்தில் குரு இருக்க வேண்டும். அல்லது வேறு ஸ்தானங்களில் நின்ற குரு 10ம் இல்லத்தைப் பார்க்க வேண்டும்.

### மருத்துவத்துறை

சூரியனும் செவ்வாயும் கூடி இருந்தாலும், ஜெனனலக்கினத்திற்கு 9-10-11 ஆகிய ஸ்தானங்களில் மருத்துவ கிரகமான கேது இருந்தாலும் அந்தஜாதகருக்கு, மருத்துவத் துறையில் கல்வி பயின்று, பட்டம் பெறக் கூடிய பாக்யம் உண்டாகும். சந்திரன் ஆட்சி உச்சம் பெற்று இருப்பின் அறுவை சிகிச்சையில் நிபுணர் என்று பெயர் பெறுவார். இத்தகைய அமைப்புடன் கூடிய கிரக சித்திரம் இடம் பெறாதவர்கள் மருத்துவத்துறையில், கல்வி பயில்வது என்பது இயலாதகாரியமாகஇருக்கும். ஒரு வேளை பட்டம் பெற்றாலும், அத்துறையில் பிரகாசமடைய முடியாது.

### பாதுகாப்புத்துறை

ஜீவன் ஸ்தானமான 10ம் இல்லத்தில் அங்காரகன் அல்லது ராகு இருந்தால் அந்த ஜாதகர், ராணுவம்-பொலிஸ் -துப்பறியும் இலாகா போன்ற துறைகளில் போதுமான பயிற்சி பெற்று அதில் உத்தியோகம் செய்யக் கூடிய பாக்கியமும் பெறுவார்கள் 10ம் இல்லத்தை அங்காரகன் பார்க்கும் அமைப்பும், கூட

(4ஆம் பக்கம் பார்க்க)

பரமபிதா காட்டிய பாதை



# பக்தியின் வெளித் தோற்றத்தை நாடுவோர் உள் அர்த்தத்தை பற்றி சிந்திப்பதுஇல்லை

**சேவியர் ஜோசவ்**

இன்றைய நாளுக்கான புனித யோவான் 6 51-58

கைகளினால் கொச்சைப் படுத்தினார்களோ, அது போலவே இன்றும் திருவிருந்தில் பங்கு கொள்ளும் பார் எந்தவொரு உணர்வு மில்லாமல் திருவிருந்தின்

எட்ட வைக்கிறார்கள். உண்மையின் இந்தக்கோடரிக்காம்புகளைச் சுட்டெரிக்க வேண்டும். மண்ணிலே கால் பதிக்காது விரட்டப்படவேண்டும்.

இரண வேதனையொடு அரை நூற்றாண்டு கழிந்தது. இதன் கால எல்லை இன்னும் நீடிக்கப்பட வேண்டுமா?. நிம்மதிப் பெருமூச்சு விட தடைக் கல்லாய் இருப்பவர்களை விரட்டும் பணி சிந்திக்கும் மானுடத்தின் மகத்தான வேலை.

எழுமின்! விழிமின்!! என்பது வேதாந்தி விவேகானந்தரின் அப்பழுக்கற்ற அறைகூவல். போர்க்களத்திற்கு எழாவிட்டாலும், விடுதலைப்போரிற்கு மாசுகற்பித்து நந்தியாகும் நாதியற்றவர்களை இனங்காண எழுமின் என்று கூறியாகவேண்டும்.

மரகதத் தீவு. செழுமையின் உறைவிடம். அந்த நிலத்தின் நன்மை இங்கு வதியும் மக்களின் அகத்தில் எழாவிட்டால் பயனில்லை. வயிற்றுப் பிழைப்புக்காய் அரசியல் நடத்துவோர் இந்த மண்ணில் இருக்கும் வரை நிம்மதி மலரப்போவதில்லை.

அன்புடன் ஆசிரியர்

# உள் அர்த்தத்தை பற்றி சிந்திப்பதுஇல்லை

## சேவியர் ஜோசவ்

இன்றைய நாளுக்கான புனித யோவான் 6 51-58 நற்செய்தி வாசகங்கள் அற்புதமான ஒரு மறையுண்மையை நமக்குத் தெரிவிக்கின்றது.

''விண்ணிலிருந்து இறங்கி வந்தவாழ்வு தரும் உணவு நானே மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்''

என்ற கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அன்று அவருடன் இருந்த சீடருள் பலர் இடறல் பட்டனர். அப்படியே இன்றும் இவ்வார்த்தைகள் பலருக்கு இடறலாய் இருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

''விசுவாசியாதவன் நேர்மையான உள்ளத்தினன் அல்லன். ஆனால் நீதிமான் தன் விசுவாசத்தினால் வாழ்வான்'' (அப 2-4) என்ற இறைவார்த்தைக்கொப்ப, புனித பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் ''நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கின்றீர்கள். ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகின்றார். எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும். ஏனெனில், ஆண்டவருடைய உடல் என உணராமல் உண்டு பருகுபவர் தம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்கின்றனர் (1கொரி11-26-29) என்று தாம் ஆண்டவரிடமிருந்து பெற்ற இதற்கான விளக்கத்தை எமக்குத் தந்திருக்கின்றார்.

இன்று நடைமுறையில் நாம் காண்பதென்ன? 1 கொரி 11-20 22 இல் கூறப்பட்டுள்ளபடி ஆதிக் கிறிஸ்தவர்களில் சிலர் எப்படித் திருவிருந்தைத் தம் நடவடிக்கைகளினால் கொச்சைப் படுத்தினார்களோ, அது போலவே இன்றும் திருவிருந்தில் பங்கு கொள்ளும் பலர் எந்தவொரு உணர்வுமில்லாமல் திருவிருந்தின் மகிமையை உணராமல் தம் நடவடிக்கைகளினால் திருவிருந்தைக் கொச்சைப் படுத்துவதையும், மேலும் தகுதியின்றித் திருவிருந்தில் பங்குகொள்வதால் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் புனித உடலுக்கும், இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகின்றோம். என்பதனை உணராது அறியாமையில் உழல்கின்றார்கள் என்பதனையும் காணக் கூடியதாக இருக்கின்றது. கனிகளைக் கொண்டு மரத்தை அறியலாம் என்ற கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகள் நம்முள் பலரை இனம்காண வைக்கின்றது.

இன்று மக்கள் கடவுளை நாடுவதை விடச் சிற்றின்பங்களையே மிகுதியாய் நாடுகின்றனர். பலர் பக்தியின் வெளித்தோற்றத்தையே கொண்டிருக்கின்றார்கள்; ஆனால் பக்தியின் உள்ளாற்றலைப் பொருட்படுத்துகின்றார்களில்லை. இன்று நாட்டின் நடப்புக்கள் உண்மைக்குச் சான்று பகர்வதாயில்லை.

நம் மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து துன்புறும் இவ்வேளையிலாவது நாம் உண்மையான மனமாற்றத்தை நாடுவோம். கிறிஸ்துவுக்குச் சான்றுகளாக விளங்கும் பகிர்தல், சகிப்புத்தன்மை. பிறர் சிநேகம் போன்ற அரிய பண்புகளை நாம் செயலில் காட்ட நமக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் மீண்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அழைக்கப்பட்டோர் பேறு பெற்றோர் அழைக்கப்பட்டவர்கள் விசுவாசம் கொண்டு அவரை அறிக்கையிடுவதின் மூலம் கிறிஸ்துவில் பலம் கொண்டு சாட்சியாக வாழ்வு வாழ பரம பிதாவினால் கிருபையாய் அளிக்கப்பட்டதே நற்கருணையாம்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ கடவுள் அருள்தேவை
நற்செய்தி என்பது தேவனுடைய செய்தி;
அது கிறிஸ்தவனின் மனதில் தோன்றிய யோசனை
அல்ல.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வடபகுதியின் போர் நிலைவரம்

# கவலை அளிப்பதாக உள்ளது!

## யாழ். ஆயர் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் வடபகுதியில் நிலவும் நிலைமை பெரும் கலலையை அளிப்பதாகவுள்ளது. அங்கு போர் தீவிரமடையும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரியவருகிறது'' என்று வன்னி சென்று கொழும்பு திரும்பிய யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் கொழும்பில் வைத்து எமது நிருபரிடம் தெரிவித்தார்.

ஆயர் மேலும் தெரிவிக்கையில்

வன்னி மக்களுக்கு இன்று வரை உலர் உணவு நிவாரணம் எதுவும் வழங்கப்படபடவில்லை வன்னியில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத்தட்டுப்பாடு இருப்பதாகவும், பெருட்களின் விலைகள் உயர்ந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணை ஒரு லீற்றர் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது உள்ளூர் போக்கு வரத்துக்கும் பெருந்தொகைப் பணம் அறவிடப்படுகிறது,

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி சென்றுள்ள சுமார் 1200 பேருக்கு இன்றுவரை உலர் உணவு வழங்கப்படவில்லை

தென்மராச்சியில் இருந்து இடம் பெயர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு போவதால் அவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறுகிறார்கள் என்று வன்னிமக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

யாழ். ஆயர் மடுத்திருப்பதிக்குச்சென்று மதவழிபாட்டில் கலந்துகொண்டபின்னர் கத்தோலிக்க மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்று அங்கு வைத்து இப்பேட்டியில்அவர் தெரிவித்துள்ளார், (வ

## படையினரின் சூட்டுக்கு பாடசாலை மாணவன் பலி

### ஏறாவூரில் சம்பவம்

(ஏறாவூர்)

ஏறாவூர் களுவங்கேணிப் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மொறக் கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் எம். விஜயதர்சன் (வயது 20) என்ற மாணவனே சூட்டுக்குப் பலியானவராவார்.

வீட்டு முற்றத்தில் நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தவேளை வீதியால் வந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மாணவன் விஜயதர்சன் ஸ்தலத்திலே பலியானதும் சக மாணவனான எஸ். கோகுலராஜ் (வயது 20) படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணைகளை மேற்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே. விஸ்வநாதன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரை நீதிமன்றில் ஆஜராகுமாறு பணித்தார். (ந-108)

## 'சிற்றிஒவ் றிங்கோ' திட்டமிட்டபடி செவ்வாய், வியாழன் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

எம். எல். எவ். ரேடிங் கம்பனியினரால் நடத்தப்படும் திருமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான ''சிற்றிஒவ் றிங்கோ'' கப்பல் சேவை திட்டமிட்டப்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் நடைபெறுமென கம்பனி உரிமையாளர் அறிவித்துள்ளார்.

டயணச்சீட்டு பெற்றவர்கள் அந்தந்த தினங்களில் பயண ஆயத்தங்களுடன் வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயணச்சீட்டைப் பெற்ற போதிலும் பயணம் செய்யாமல் இருப்பவர்கள் பற்று சிட்டைக் காட்டி பணத்தை மீளப்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: (ந-7

### தேர்தல் களத்தில்...

கப்பட்டுள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் டி. எம் ஜயரத்தினா தெரிவித்துள்ளார்

பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலை இன்று தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் செயலாளர் ஜயரத்தினா மேலும் தெரிவித்துள்ளார்;

வடக்கு கிழக்கு மாகாணத்

### பயணிகள்...

வித்துள்ளது.

எனினும் பயணிகளை பயண ஏற்பாட்டுடன் இன்று காலை சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயணம் இன்று சாத்தியப்படாவிடில் பயணத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந-7]

### 18 தினங்களில்......

இம்முறைப்பாடுகளை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் வவுனியாவில் உள்ள படைமுகாம்களில் மேற்கொண்ட விசாரணைகளின் போது ஆறு பேரைக் காணவில்லை என வவுனியா

### தேர்தல்...

மட்டக்களப்பில் யோசப் பராராஜசிங்கத்தின் தலைமையிலும் போட்டியிடவுள்ளது.

மற்றும் திருமலை அம்பாறை வன்னி மாவட்ட தலைமைவேட்பாளர்குறித்து இதுவரை முடிவு செய்யப்படவில்லை என்றும், அடுத்த வாரமளவில் இம்மாவட்டங்களின் வேட்பாளர் தெரிவு முடிவுறும் என்றும் ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி வடக்குக் கிழக்கில் தனித்துப் போட்டியிட இருப்பதாகவும், வேட்பாளரை விட கட்சிக்கே வாக்

## கல்வியங்காடு, மூத்தவிநாயகர் பகுதியில் ஷெல் வீழ்ந்துவெடித்ததில் ஆறுபேர் காயம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு வயல்வெளி கந்தசாமிகோவிலடியிலும்நல்லூர் மூத்தவிநாயகர் கோவிலடியிலும் நேற்று அதிகாலையிலும், காலையிலும் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்ததில் 6 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் மூவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் மூத்தவிநாயகர் கோவிலடியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஆறுபேர் காயம் அடைந்துள்ளனர் இவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின்விபரம் வருமாறு:

சதீஸ்குமார் (வயது 15), த. கலைச்செல்வி (வயது 4), த. பிரியதர்சினி (வயது 2), செ. மயூரன் (வயது 13), செ. துச்சனன் (வயது 10), செ. ரகுபதி (வயது 12)

## வெள்ளவத்தையில் கடும் சோதனை எவரும் கைதாகவில்லை

[கொழும்பு]

வெள்ளவத்தைப் பகுதியில் இன்று அதிகாலை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சில பகுதிகளில் தேடுதல் நடத்தினர்,

இத்தேடுதலின்போது வீதியில் போவோரையும் வருவோரையும் படையினர் மறித்து பலமணி நேரமாக சோதனை நடத்தினர்.

இத்தேடுதலின் போது எவரும் கைதாகவில்லை என அறிவிக்கப்படுகிறது. (வ)

## பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு ஜெயதிலக்க என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்:

பம்பலப்பிட்டியில் உள்ள தமிழ் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரிடம் லஞ்சம் பெற முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் இடமாற்றம் பெற்றுள்ளார். (வ)

### அகில...

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்திருந்த போதும் இப்போது போட்டியிடத் தீர்மானித்திருப்பது தமிழ் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ந)

### இராஜமனோகரி..

வலம்புரிக்குத் தெரிவித்தார்: வன்னிமாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கு திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தலைமை தாங்கவுள்ளார்என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இராஜமனோகரி புலேந்திரன் ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### வரதராஜப்...

ணிச் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த சுயேட்சைக்குழு வடக்குக் கிழக்கிலுள்ள சகல

### கர்ப்பிணித்...

எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

சுகாதாரப்பிரிவினரின் இந்த நடவடிக்கையாக கர்ப்பிணித்தாய்மார் மத்தியில் பெரும் விசனத்தை எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எயிட்ஸ் நோய் தொடர்பாக ஏற்கனவே இனங்காணப்பட்டோரில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளாமல் எமது இரத்தத்தை ஏன் பரிசோதனை செய்யவேண்டு என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (வ)

### தபால் மூலம்...

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மக்களை வவுனியாவுக்கும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவ

ணியின் வேட்பாளர் பட்டியலை இன்று தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் செயலாளர் ஜயரத்தினா மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிடவுள்ளது. யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதுதொடர்பாக இன்னமும் முடிவெடுக்கவில்லை என்றும் அதுதொடர்பாக விரைவில் முடிவு செய்ய வேண்டுமென கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.


கஜன்

திரை

ஊர்காவற்றுறை

ரஜனி-குஷ்பு

பிரபு-சுஹாசினி

நடிப்பில்

தர்மத்தின் தலைவன்

காட்சி நேரம்

பி.ப 8.30 மணி

(இ/652)


அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் வவுனியாவில் உள்ள படைமுகாம்களில் மேற்கொண்ட விசாரணைகளின் போது ஆறு பேரைக் காணவில்லை என வவுனியா மாவட்ட அலுவலக இணைப்பதிகாரி என். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு; சண்முகம் சுந்தரம் [வயது 21] மயில்வாகனம் சண்முகராசா [வயது 24] அரியதாஸ் விஜயகுமார் [வயது 22] வேலாயுதம் பிள்ளை தருமலிங்கம் (வயது 39] பொன்னுசாமி சிவகுமார் (வயது22) சிவானந்தம் சிவகரன் (வயது17)

(வ)


ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

பிரசாந் இம்ரான்

நடித்த

பார்த்தேன் ரசித்தேன்

CD பிரதி (புதியவெளியீடு)

காட்சி நேரம்

10-30. 2-00 (ப.நே)

[இ 688]


களின் வேட்பாளர் தெரிவு முடிவுறும் என்றும் ஆனந்த சங்கரி அறிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி வடக்குக் கிழக்கில் தனித்துப் போட்டியிட இருப்பதாகவும், வேட்பாளரை விட கட்சிக்கே வாக்களிக்க வேண்டும் என்று மக்களைக் கோரவிருப்பதாகவும் செயலர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் செயற்குழு இன்றுகூடி வேட்பாளர் பற்றி தீர்மானிக்க இருப்பதாக அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ரெலோ அமைப்பின் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா யாழ்ப்பாணத்தில் போட்டியிடவுள்ளார்.

மட்டக்களப்பில் பத்திரிகையாளர் செழியன் பேரின்பநாயகம் ரெலோ முதன்மை வேட்பாளராக இத்தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

## வேட்பாளர்களைச்...

தலைக் கூட்டணியின்சார்பில் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்களை சந்திப்பதற்காக கூட்டணியின் உபதலைவர் வீ.ஆனந்தசங்கரியும், முன்னாள் எம்.பி மாவைசேனாதிராசா, யாழ். மாநகரசபை பிரதி மேஜர் ரவிராஜ் ஆகியோர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியா வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

கது. (வ)

## வரதராஜப்...

ணிச் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த சுயேட்சைக்குழு வடக்குக் கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இமானுவல்சிங்காவும் முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞானதாஸ் சிவமும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ், இன் சின்னம் தேர்தலில் பாவிக்க முடியாதிருப்பதாலேயே பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழுவில் போட்டியிடுகின்றனர். (வ)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் கொத்தணி வாக்குச் சாவடி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ந-7)


மாணவ மணிகளே!

நாளை எதிர்பாருங்கள்.

★ வரலாறும் சமூகக் கல்வியும் பகுதி I வினாக்கள்

★ கடந்த வாரம் வெளியான தமிழ் மொழி பகுதி I இற்கான விடைகள்.



விற்பனைக்குண்டு

அச்சகங்களுக்குத் தேவையான

வச்சிரம் (வீனஸ்)

விற்பனைக்குண்டு

(மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்)

தொடர்பு;-

"வலம்புரி"

இல. 15 வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் [illegible] 20 [illegible] வெளியிடப்பட்டது.